இலட்சம் ரூபாயை மாநில அரசு மானியமாக வழங்கி வருகிறது. இந்தப் பணத்தில் முதியோர்களுக்கு உணவு, போதுமான தங்கும் இட வசதி, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளும் அடங்கும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற்ற பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட பெற்றோர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையிலே, முதியோர் இல்லம் எல்லா வட்டங்களிலும் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து வட்டாரங்களிலேயும் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். இதிலே முன்னோட்டமாக 64 வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த 64 வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டதற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும்-கன்னியாகுமரி மாவட்டம் என்று இல்லை; அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற வட்டாரங்களிலும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல். (குறுக்கீடு) வினா வேண்டாமா? அடுத்து, வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

இலவச பயிற்சி மையம்

***4869—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய, மாநில அரசுப் பணித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையம் மதுரையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்குத் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திலும், அப்பல்கலைக்கழகத் துணை வேந்தர்களைத் தலைமையாகக் கொண்ட குழுவால் 100 மாணவர்களுக்குத் தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அண்ணாநகரில் உள்ள IAS பயிற்சி மையத்தைப்போன்று, தென் மாவட்டங்களில் பயிற்சி மையம் இல்லை. அதைப்போன்ற பயிற்சி மையம் தென் மாவட்ட மாணவ-மாணவிகளுக்காக அமைக்கப்படுமா? அதைப்போல, மத்திய, மாநில அரசுகளின் தேர்வாணையங்கள் நடத்தும் தேர்வுகளைப் பற்றிய விழிப்புணர்வுகளை, முக்கியமாக மாநில அரசு, கல்வியில் ஏற்படுத்த வேண்டும். அரசுத் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் போட்டியிட்டு, நேர்காணல் வரை செல்லும் மாணவர்களின் மதிப்பெண் பட்டியலை வெளியிட வேண்டும்.*

பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசுகளின் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் நம்பகத்தன்மையை உருவாக்குவதற்காக வீடியோ பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகள் பயிற்சி மத்திய அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றது. இதிலே, நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள், குறிப்பாக ஆதி திராவிட மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், சீர்மரபினர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை, அண்ணா நகரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்கான பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கப்படும் மாணவர்களுக்கு என்னென்ன வசதிகள், வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றனவோ, அவையனைத்தும் தற்போது மதுரைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகின்ற தேர்வு மையத்திலும், கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்திலுள்ள தேர்வு மையங்களிலும் செய்து கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, 2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் 336 மாணவர்கள் பயிற்சி பெற்று, தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டில் மட்டும் 48 மாணவர்கள் அந்தப் பயிற்சிக் கழகத்தில் பயின்று, தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி இருக்கின்றார்கள். மாணவர்கள் பெறக்கூடிய மதிப்பெண்களை வலைதளத்தில் வெளியிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது நம்முடைய அதிகார வரம்பிற்குட்பட்டது இல்லை. அது மத்திய அரசாங்கத்தினுடைய அதிகார வரம்பிற்குட்பட்டது.

அதேபோல, இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கின்றார். மாநில அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தேர்வுகளை எழுதுகின்ற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். இரண்டாவதாக, அப்படிப்பட்ட தேர்வுகளை எழுதுகின்ற மாணவர்களுடைய மதிப்பெண்கள் வெளியிடப்படுமா என்றும் கேட்டிருக்கின்றார். மாநில அரசாங்கம் நடத்தும் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதில்லை. இருப்பினும், இன்று பல்வேறு

2012 ஏப்ரல் 27]

சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவைபற்றி வரவிருக்கின்ற மானியக் கோரிக்கையில் பதிலளிக்கின்றபோது தெரியப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், என்ன ஆயிற்று? மைக்கை என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, தமிழகத்திலே இருக்கக்கூடிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, பதில் கூறியது வருவாய்த் துறை அமைச்சர் அல்ல.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கடந்த 4 ஆண்டுகளைவிட தற்போது தமிழ்நாடு அரசு நடத்தக்கூடிய தேர்வுகளிலும், இந்திய அரசு நடத்தக்கூடிய தேர்வுகளிலும் போட்டியிட்டுத் தேர்ச்சி பெறக்கூடிய மாணவர்களின் விகிதம் அதிகமாக இருக்கின்றது. மேலும் அதை உயர்த்தக்கூடிய வகையில், தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இலவசமாக இந்தத் தேர்வுகளை எழுதுவதற்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை, அண்ணா நகரில் இயங்கி வருகின்ற இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு மையத்தில் 300 மாணவர்களுக்கு Preliminary Exam எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அதிலே தேர்ச்சி பெறுகின்ற 100 மாணவர்களுக்கு Main Exam எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை

ஏற்பதற்கு முன்னால், அதிலே படிக்கின்ற மாணவர்கள் தங்குவதற்கு, உணவிற்கு என அனைத்திற்கும் ரூ.800/- கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இன்றைக்கு அதை 1,200/- ரூபாயாக உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

அதுமட்டுமல்ல; அந்த main exam எழுதுவதற்குப் பயில்கின்ற மாணவர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டு, புதுடெல்லியில் இருக்கின்ற தமிழ்நாடு இல்லத்தில், தங்குவதற்கு அனைத்து வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுகின்றது. மேலும், தென் மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து அனைவரும் தங்கிப் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கும் என்பதை உணர்ந்துதான், தென் மாவட்டங்களில் இருக்கின்ற அந்த மாணவ, மாணவிகள் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்திலேதான், தென் மாவட்டங்களிலே இருக்கின்றவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்திலேயும், மேற்கு மாவட்டங்களிலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் பயனடைய வேண்டுமென்பதற்காக கோவை பாரதியார் பல்கலைக் கழகத்திலேயும், இப்படிப்பட்ட பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முருகுமாறன் அவர்கள்.

திரு. எஸ். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, மிகவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதி. நாகப்பட்டினம், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் எல்லையில் அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும், எனவே, அப்பகுதிவாழ் மாணவர்களுடைய நலன் கருதி, மத்திய, மாநில அரசுப் பணித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையம் அங்கு அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நோக்கம் நல்ல நோக்கம்தான். அவர் நல்ல நோக்கத்துடன்தான் கேட்கின்றார். ஆனால், இந்தியக் குடிமைப் பணிகள் (I.A.S.) தேர்வில் தேர்ச்சி பெறுவதற்குப் பயிற்சி மையம் அமைக்கப்பட வேண்டுமென்றால், சென்னை, மதுரையைப் போன்று, மாணவர்கள் தங்கிப் படிப்பதற்குத் தேவையான, அத்தனை வசதிகளும் கிடைக்க வேண்டும். சென்னையில் I.A.S. தேர்வுக்குப் பயிற்சி பெறுவதற்கு அத்தனை வசதிகளும் இருக்கின்றன. ஆனால், அந்த மையத்தைக் காட்டுமன்னார்கோவிலில் வைத்தால், அவர்களுக்கு சாதாரண, அடிப்படைத் தேவைகள்கூட கிடைக்காது. எந்த நோக்கத்திற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறோமோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டும். அதற்காகத்தான் சென்னையில் அந்த மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மதுரையில், பழமை வாய்ந்த பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே அனைத்து வசதிகளும் இருக்கின்றன. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும், பழமை வாய்ந்த ஒரு பல்கலைக்கழகம். அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. கோயம்புத்தூர், மதுரை எல்லாம் இப்போது வளர்ந்திருக்கின்ற நகரங்களாகும். அத்தனை வசதிகளும் அங்கே இருக்கின்றன. ஆகவே, மாணவ, மாணவிகளுக்குப் பயனுள்ள வகையிலே அமைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இப்படிப்பட்ட மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மத்திய, மாநில அரசுத் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி மையம் தஞ்சாவூரில் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது சொல்லிய பதிலையே எடுத்துக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூரில் இருக்கின்ற மாணவர்கள், மதுரையில் இருக்கின்ற காமராஜர் பல்கலைக்கழகத்தில் பயின்று, பயனடையலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிசாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நகரமாகத் திகழக்கூடிய காரைக்குடியில் மத்திய, மாநில அரசுத் தேர்வுப் பணிகளுக்காக இலவச பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எங்கெல்லாம் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பயிற்சி மையம் அமைக்கப்படுமா என்ற ஒரு கேள்வியைக் இங்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், சில உறுப்பினர்கள் இதே கேள்வியைக் கேட்பார்கள். அவர்களுக்கெல்லாம் சொல்கின்ற ஒரே பதில், எங்கெல்லாம் பல்கலைக்கழகம் இருக்கின்றனவோ, அங்கு இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி மையம் அமைப்பதற்கு அத்தனை வசதிகளும் இருக்கின்றன என்று கூறுவார்களேயானால், அதை நடத்துவதற்கு எங்களால் முடியும் என்ற ஒரு முன்மொழிவையும் அரசாங்கத்திற்கு அனுப்புவார்களேயானால், அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.